# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 258/மா/2025**

**நாள்: 07.05.2026**

S. அன்பழகன், துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி
(2) உரிமையாளர்
வெங்கடேசன் மருத்துவமனை,
காஞ்சிபுரம் --- எதிர்மனுதாரர்கள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் & வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன் என்பவரின் 12.07.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 15.07.2025 அன்று பெறப்பட்டு 258/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் & வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன் என்பவர் தனது 12.07.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“தமிழகத்தில் பழமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்கிற விதியை மீறி, 1-A வைகுண்டபெருமாள் கோவில் தெருவில் வைகுண்ட பெருமாள் கோவிலுக்கு 250 மீ. தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலுக்கு 100 மீ. தூரத்திலும், உலகளந்த பெருமாள் கோவிலுக்கு 200 மீ. தூரத்திலும், காமாட்சி அம்மன் கோவிலுக்கு $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்திலும் சுமார் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டிடம் டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை எலும்பு, மூட்டு, நரம்பு மற்றும் விபத்து சிகிச்சை மையம்

அதுவும் பிரதான சாலையில் பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் சட்டவிரோதமாக கட்டி உள்ளதை தகுந்த ஆதாரங்களுடன் விளக்கி கட்டிடத்தை இட நேராய்வு செய்து விதிமீறிய கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு நான் கடந்த 26.04.2025இல் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு புகார் மனு அனுப்பி அதன் நகலை நகராட்சி நிர்வாக இயக்குனருக்கும் அனுப்பினேன் (நான் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகல் இத்துடன் இணைக்கப்படுகிறது)

நான் அனுப்பிய புகாரை ஆணையர் 30.04.2025 இல் பெற்றுக் கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது. அதுபோல நிர்வாக இயக்குநர், மண்டல இயக்குனர் இருவரும் பெற்றுக் கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே தமிழகத்தில் பழமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்று 30.01.1997 இல் அரசாணை வெளியிடப்பட்டதை அறிந்தும் அரசாணையை மீறி அதுவும் பல்லவர் காலத்து பழமை வாய்ந்த கோவில்களான வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து 250 மீ. தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலிருந்து 100 மீ. தூரத்திலும், உலகளந்த பெருமாள் கோவிலிலிருந்து 200 மீ. தூரத்திலும், காமாட்சி அம்மன் கோவிலிலிருந்து $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்திலும் 15 மீ. உயரத்திற்கு மேல் டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை சட்ட விரோதமாக கட்டப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் எனது புகாரிலேயே கடந்த 10 ஆண்டுகள் விதிமீறி செயல்படும் டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனையை மாநகராட்சி ஆணையர்கள் உரிய நேரத்தில் ஆய்வு செய்யாத காரணத்தினாலும், இந்த விதிமீறிய கட்டிடம் தொடர்ந்து செயல்பட மாநகராட்சி உறுதுணையாக இருந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன்.

மேலும் அரசாணை எண் 139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 10.05.2002 காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி PROTECTED MONUMENTS UNDER THE ANCIENT MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS ACT, 1958இல் அறிவிப்பு செய்யப்பட்டபடி வைகுண்ட பெருமாள், முக்தேஸ்வரர், உலகளந்த பெருமாள், காமாட்சி அம்மன் கோவில்களுக்கு 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் கட்டிட உயர வரம்பு 9 மீட்டர் ஆகும். மேற்கண்ட கோவில்களுக்கு 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் கட்டிட உயர வரம்பு 9 மீட்டர் என்கிற விதியை மீறி அதுவும் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை இயங்கி வருவதை பார்க்கும் போது மாநகராட்சி அதிகாரிகள் தாராளமாக லஞ்சம் பெற்றுதான் இந்த மருத்துவமனை விதிமீறி செயல்பட காரணமாக இருந்துள்ளார்களோ என்கிற எனது சந்தேகத்தை புகாரிலேயே தெரிவித்திருந்தேன்.

மேலும், விதிமீறிய கட்டிடங்கள் தொடர்பான வழக்கில், மாண்புமிகு உயர்நீதிமன்றம் திருச்சி மாநகராட்சி ஆணையரை நேரில் ஆஜராக சொல்லி கடுமையாக கண்டித்ததையும், திருச்சி மாநகராட்சி ஆணையர் உட்பட அனைத்து அதிகாரிகள் மீதும் துறை ரீதியான நடவடிக்கை எடுத்துள்ளதையும், சுட்டி காட்டியதோடு விதி மீறிய கட்டிடங்களை இடிக்க வேண்டிய பொறுப்பு மாநகராட்சியை சாரும் என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதை நான் என் புகாரிலேயே ஆணையருக்கு சுட்டி காட்டி இருந்தேன்.

சாதாரண பொதுமக்கள் கொடுக்கும் புகார் மனுக்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும், ஆள்பலம், பணபலம் கொண்டவர்கள் புகார் மீது மட்டும் தான் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கின்றார்கள் என்றும் இத்தகைய அதிகாரிகளின் அலட்சிய போக்கை மூன்றாம் நபர்கள் போல் கைகட்டி வேடிக்கை பார்க்காது என்று மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவை மனதில் வைத்து என்புகார் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நான் என் புகாரிலேயே தெரிவித்திருந்தேன். மேலும் தலைமை செயலாளரின் சுற்றறிக்கைபடி 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து என் புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை வழங்குமாறு புகாரிலேயே கேட்டிருந்தேன்.

என் புகாருக்கு நடவடிக்கை எடுக்காவிட்டாலும் ஆணையர் அவர்கள் அனுமதி இல்லாமல் செயல்படும் கட்டுமானங்கள் மீது மாண்புமிகு உச்சநீதிமன்றம் 12199–12200/2025 நாள் 30.04.2025 இல் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு ஆணையரின் உயர்அதிகாரியான நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் Roc No.3555/2025/TP3 நாள் 15.5.2025 கடிதம் மூலம் உச்சநீதிமன்ற உத்தரவை இணைத்து அனைத்து மாநகராட்சி ஆணையர்களுக்கு கடிதம் அனுப்பியும் அவரின் உயர் அதிகாரி உத்தரவை மதிக்காவிட்டாலும், மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவையே மதிக்காத ஆணையரின் செயலை பார்க்கும் போது மாநகராட்சி ஆணையர் தன்னை உச்சநீதிமன்றத்தை விட சர்வ வல்லமை படைத்தவராக கருதுகின்றாரோ என்று நினைக்க தோன்றுகிறது.

எனவே மாண்புமிகு நேர்மையின் சிகரமான தாங்கள் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி விதிமீறி மாநகராட்சி அனுமதியின்றி செயல்படும் டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை கட்டிடத்தை இடித்து அகற்றுவதோடு, விதிமீறிய டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை கட்டிடத்திற்கு ஆதரவாக செயல்பட்ட மாநகராட்சி ஆணையர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 24.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 5400/2025/எப்1, நாள் 06.08.2025 மற்றும் 18.03.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளார். அதில்–

<u>06.08.2025 நாளிட்ட அறிக்கை</u>

''வெங்கடேசன் மருத்துவமனை இரு கட்டிடங்களில் செயல்பட்டு வருகிறது.

1) காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.11, நகரளவு எண்.823/1ஏ, பழைய கதவு எண்.1ஏ வைகுண்ட பெருமாள் சன்னதி தெருவில் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக கட்டிட அனுமதி எண் 008/BL/2018/00021, நாள் 14.02.2018–ன்படி குடியிருப்பு கட்டிடம் கட்ட ஸ்டில்ட் தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது கட்டிட உரிமையாளர் அனுமதிக்கு முரணாக முன்பக்கம் மற்றும் பக்கவாட்டில் காலியிடம் பராமரிக்காமல் 21.60 மீ X 8.00 மீ நீள அகலத்தில் கூடுதலாக மாறுதலாக, கட்டிடம் கட்டியுள்ளார். ஸ்டில்ட் தளம் வாகனம் நிறுத்துமிடமாக பராமரிக்காமல் முழுகட்டிடமும் மருத்துவமனையாக பயன்பாட்டில் உள்ளது.

2) காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.11, நகரளவு எண்.825, 826/2, கதவு எண்.88, 87சி கீழராஜவீதி தெருவில் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக கட்டிட அனுமதி எண் 295 நாள் 20.02.1993–ன்படி குடியிருப்பு கட்டிடம் கட்ட தரைதளம், முதல் தளம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது கட்டிட உரிமையாளரால் அனுமதிக்கு முரணாக முன்பக்கம் மற்றும் பக்கவாட்டில் காலியிடம் பராமரிக்காமல் நான்கு தளங்களுடன் கூடிய மருத்துவமனை கட்டிடமாக பயன்பாட்டில் உள்ளது.

மேற்கண்ட இரண்டு கட்டிடங்கள் சுமார் 28 ஆண்டுகள் மற்றும் 7 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடம், கட்டிடங்களின் மீது மேல்நடவடிக்கை தொடர தொடர்ச்சியாக நகரமைப்பு பிரிவில் அலுவலர் பணியிடம் காலியாக இருந்த நிலையில், தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. தற்போது தொடர் நடவடிக்கையாக கட்டிட உரிமையாளர் அனுமதிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாறுதலாகவும்/கூடுதலாகவும் கட்டிடம் கட்டியிருப்பதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135(1)–ன் கீழ் 23.07.2025–ல் அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், கட்டிடத்திற்கு இம்மாநகராட்சி மூலம் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி நகல்கள், வரைபடங்கள் மற்றும் அறிவிப்பு நகல்கள் ஆகியவை இணைத்து அறிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>18.03.2026 நாளிட்ட அறிக்கை</u>

"காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.11, நகரளவு எண் 823/1ஏ, பழைய கதவு எண் 1ஏ, வைகுண்ட பெருமாள் சன்னதி தெருவில் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக கட்டிட அனுமதி எண் 088/BL/2018/00021 நாள் 14.02.2018 இன்படி தரை, ஸ்டில்ட், முதல் மற்றும் இரண்டாம் தளம் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிட உரிமையாளர் அனுமதிக்கு மாறாக முன்பக்கம் மற்றும் பக்கவாட்டில் காலியிடம் பராமரிக்காமல் 21.6 மீ X 8.00 மீ நீள அகலத்தில் கட்டிடம் கட்டியுள்ளார். ஸ்டில்ட் தளம் வாகன நிறுத்துமிடமாக பராமரிக்காமல் மருத்துவமனையாக பயன்பாட்டில் உள்ளது. மேலும் குடியிருப்பு கட்டிடமாக அனுமதி பெறப்பட்டு மருத்துவமனை கட்டிடமாக பயன்பாடு மாற்றம் செய்யப்பட்டு தொல்பொருள் துறை உயர கட்டுப்பாடு விதிகளை மீறி கூடுதலான உயரத்தில் கட்டிடம் கட்டியுள்ளார்.

காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.11, நகரளவு எண் 825, 826/2, பழைய கதவு எண் 88, 87C, கீழராஜ வீதி தெருவில் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக கட்டிட அனுமதி எண் 295, நாள் 20.02.1993 இன்படி தரை, முதல் மற்றும் இரண்டாம் தளம் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிட உரிமையாளர் அனுமதிக்கு மாறாக முன்பக்கம் மற்றும் பக்கவாட்டில் காலியிடம் பராமரிக்காமல் தரை, முதல் மற்றும் இரண்டாம் தள அனுமதிக்கு மாறுதலாக கூடுதலாக மூன்றாம் மற்றும் நான்காம் தளங்களுடன் கூடிய கட்டிடமாக தொல்பொருள் துறை உயர கட்டுப்பாடு விதிகளை மீறி கூடுதலான உயரத்தில் கட்டிடம் கட்டியுள்ளார். மேலும் குடியிருப்பு கட்டிடமாக அனுமதி பெறப்பட்டு மருத்துவமனை கட்டிடமாக பயன்பாடு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட கட்டிடங்கள் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடங்கள் புகார் பெறப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135(1)–ன் கீழ் 23.07.2025–ல் அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. அறிவிப்பில் கட்டிட பணியை நிறுத்திவிடுவதோடு அனுமதி

வழங்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டிடத்தை பதினைந்து (15) தினங்களுக்குள் மேற்படி சட்ட பிரிவு 135(2)–ன் கீழ் கட்டிட அனுமதி கோரி திருத்திய வரைபடம் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டது. தவறும்பட்சத்தில் 135 (6)–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் 15 தினங்களுக்கு மேல் ஆயினும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்காத காரணத்தால் 04.02.2026 அன்று இறுதி அறிவிப்பு சட்ட பிரிவு 135(6)–ன் கீழ் வழங்கப்பட்டுள்ளது. இறுதி அறிவிப்பில் 15 தினங்களுக்குள் இதுவரையில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த தெரிவிக்கப்பட்டது. தவறும்பட்சத்தில் சட்டப்பிரிவு 180–ன் கீழ் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு தாக்கல் செய்வதாக தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் இதுநாள் வரை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவோ கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவில்லை. எனவே காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலக குற்றபத்திரிக்கை எண் P.R.No.6/Zone1/2026 மற்றும் P.R.No.7/Zone1/2026 நாள் 25.02.2026–ன்படி முறையே கட்டிட உரிமையாளர் மீது காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ல் பிரிவு 135(1) (2) (6) r/w 180–ன்கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்து குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள குற்றப்பத்திரிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு இம்மாநகராட்சி மூலம் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி நகல், வரைபடம், அறிவிப்பு நகல்கள் மற்றும் குற்றப்பத்திரிக்கை நகல் ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.''

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.03.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், மனுதாரர் 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் தன்னுடைய எழுத்துபூர்வமான வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''தமிழகத்தில் பழமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்கிற விதியை மீறி 1–A வைகுண்ட பெருமாள் கோவில் தெருவில் வைகுண்ட பெருமாள் கோவிலுக்கு 250 மீ தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலுக்கு 100 மீ. தூரத்திலும், உலகளந்தார் பெருமாள் கோவிலுக்கு 200 மீ. தூரத்திலும், காமாட்சி அம்மன் கோவிலுக்கு $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்திலும் சுமார் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டிடம் டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை எலும்பு, மூட்டு, நரம்பு மற்றும் விபத்து சிகிச்சை மையம் அதுவும் பிரதான சாலையில், பார்க்கிங், செட்பேக் 1 அங்குலம் கூட இடம் விடாமல் விதிமுறைகளை மீறி கட்டியுள்ளதோடு, மேலும் அரசாணை எண் 139 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.05.2002 காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி, PROTECTED MONUMENTS UNDER THE ANCIENT MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS ACT, 1958இல் அறிவிப்பு செய்யப்பட்டபடி வைகுண்ட பெருமாள், முக்தேஸ்வரர், உலகளந்தார் பெருமாள், காமாட்சி அம்மன் கோவில்களுக்கு 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் கட்டிட உயர வரம்பு 9 மீட்டர் உயரம் என்ற சட்டத்தை மீறி டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை கட்டி இருப்பது மாநகராட்சி அதிகாரிகள் தாராளமாக லஞ்சம் பெற்றுள்ளார்கள் என்று அறிய முடிகிறது.

எனவே, விதிமீறிய டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து

விதிமீறி கட்டப்பட்ட டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை கட்டிடத்தை உச்சநீதிமன்ற உத்தரவு எண் 12199–12200 நாள் 30.04.2025 உத்தரவின் கீழ் இடித்து அகற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே காஞ்சிபுரத்தில் விதிமீறிய ஸ்ரீராம் ரெசிடென்ஸி மீது மதிப்புமிக்க தங்களால் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட 83/மா/2025இன் வழக்கின் நிர்வாகி தான் ஆணையரை சரிகட்டி விட்டதாகவும், நான் உயர்நீதிமன்றத்தில் கட்டிடத்தை இடிக்க வழக்கு போடக்கூடாது என்றும், மீறி வழக்கு போட்டால் கொலை செய்து விடுவதாக மிரட்டியது தொடர்பாக D.I.G. SP ஆகியோரிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு நீதி பேரரசர் மணிக்குமார் அவர்களின் நேரடி கவனத்திற்கு என் பிரச்சனையை கொண்டு சென்றதால் என் புகார் மீது மின்னல் வேகத்தில் 10941/22/36/2025 என எண்ணிட்டு வழக்கு பதிவு செய்து விசாரணை வளையத்திற்குள் D.I.G., SP மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரையும் சேர்த்து வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது.

ஏற்கனவே காஞ்சிபுரத்தில் விதிமீறிய காஞ்சி காமாட்சி ரெசிடென்சி மீது மதிப்புமிக்க தாங்கள் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட 165/மா/2025–ன் உத்தரவை காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அமல்படுத்தாமல் அரசியல் சட்டம் எனக்கு வழங்கிய உரிமையையும் பொது நல நோக்கத்தையும் சீர்குலைத்து நான் வாழ்நாள் முழுவதும் இனி பொது நலனில் ஈடுபடக்கூடாது என்று தடுக்கும் நோக்கில் செயல்படும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து நான் பொது நலனில் தொடர்ந்து ஈடுபட எனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் வகையில் இழப்பீடு பெற்றுத் தருமாறு மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு நீதி பேரரசர் மணிக்குமார் அவர்களிடம் நேரடியாக புகார் அளித்த காரணத்தால் என் புகார் டைரி எண் 1356/CR/2026 என பதியப்பட்டு கூடிய விரைவில் வழக்கு பதிவு செய்யப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

எனவே இத்தகைய சூழ்நிலையில் என் புகார் மீது காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுப்பார் என்பது கேள்வி குறியாக உள்ளது. எனவே மரியாதைக்குரிய தாங்கள் காஞ்சிபுரத்தில் விதிமீறி கட்டி உள்ள டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை கட்டிடத்தை இட நேராய்வு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன், தாழ்மையுடன் கீழ் படிந்து கேட்டுக் கொள்கிறேன்.''

6. மேலும், மனுதாரர் 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''தமிழகத்தில் பழைமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 09 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்கிற விதியை மீறி காஞ்சிபுரத்தில், 1-A வைண்டபெருமாள் கோவிலுக்கு 250 மீட்டர் தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலுக்கு 100 மீட்டர் தூரத்திலும் உலகளந்த பெருமாள் கோவிலுக்கு 200 மீட்டர் தூரத்திலும், காமாட்சி அம்மன் கோவிலுக்கு 1/2 கிலோ மீட்டர் தூரத்திலும் சுமார் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டிடம், டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை பிரதான சாலையில் பார்க்கிங் வசதியில்லாமல் சட்ட விரோதமாக கட்டி உள்ளதை அகற்ற நான் 26.04.2025ல் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு புகார் மனு அளித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், தமிழகத்தில் பழமையான கோவில்கள் கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல்

கட்டிடங்கள் கட்டக் கூடாது என தமிழ்நாடு அரசு 30.01.1997 நாளிட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை எண்.139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.05.2002 ல் காஞ்சிபுரம் முழுமைத்திட்டத்தின்படி The Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 1958இல் அறிவிப்பில் தெரிவித்துள்ளபடி, முக்தேஸ்வரர் கோவில், வைகுண்ட பெருமாள் கோவில் மற்றும் காமாட்சி அம்மன் கோவில், 1 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் கட்டிடம் 9 மீட்டர் உயரம் இருக்க வேண்டும்.

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் கோவிலை சுற்றி விதி மீறல் கட்டிடங்கள் தொடர்பான வழக்கில் நடவடிக்கை எடுக்காமல் இருந்த திருச்சி மாநகராட்சி ஆணையரை மாண்புமிகு உயர்நீதி மன்றம் நேரடியாக கடுமையாக கண்டித்தது. மேலும் சம்மந்தப்பட்ட அனைத்து அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டது. இவ்வுத்திரவு காஞ்சிபுரம் மாநகராட்சிக்கும் பொருந்தும்.

ஏற்கனவே காஞ்சிபுரத்தில் விதி மீறி கட்டப்பட்ட ஸ்ரீராம் ரெசிடென்ஸி கட்டிடத்தின் மீது இம்முறை மன்றத்தில் புகார் அளித்து அதன் தொடர்பாக எனக்கு கொலை மிரட்டல் விடுத்தது குறித்து மனித உரிமையியல் ஆணையத்திடம் புகார் அளித்து 10941/22/36/2025 என எண்ணிட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை விதி மீறி கட்டிடம் கட்டப்பட்டதற்கு உடந்தையாக இருந்த காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்கவும், சென்னை உயர்நீதி மன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி மேற்கண்ட மருத்துமனை மீது நடவடிக்கை எடுக்கவும் இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''.

7. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் காஞ்சிபுரம் மாநகராட்சி உதவிப் பொறியாளர்கள் (திட்டம்) 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை இரு கட்டிடங்களில் செயல்பட்டு வருகிறது.

1) ''காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.11, நகரளவு எண்.823/1ஏ, பழைய கதவு எண்.1ஏ வைகுண்ட பெருமாள் சன்னதி தெருவில் அமைந்துள்ள மேற்கண்ட மருத்துமனையின் 14.02.2018 நாளிட்ட கட்டிட அனுமதியின்படி குடியிருப்பு கட்டிடம் கட்ட ஸ்டில்ட் தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அனுமதிக்கு மாறாக முன்பக்கம் மற்றும் பக்கவாட்டில் காலியிடம் பராமரிக்காமல் 21.60மீ X 8.00 மீ நீள அகலத்தில் கூடுதலாகவும், கட்டிடம் கட்டியுள்ளார். ஸ்டில்ட் தளம் வாகனம் நிறுத்துமிடமாக பராமரிக்காமல் முழுகட்டிடமும் மருத்துவமனையாக பயன்பாட்டில் உள்ளது.

2) ''காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.11, நகரளவு எண்.825, 826/2, கதவு எண்.88, 87சி கீழராஜவீதி தெருவில் அமைந்துள்ள கட்டிடம் 20.02.1993 நாளிட்ட அனுமதியின்படி குடியிருப்பு கட்டிடம் கட்ட தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம், கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அனுமதிக்கு முரணாக

முன்பக்கம் மற்றும் பக்கவாட்டில் காலியிடம் பராமரிக்காமல் 4 தளங்களுடன் கூடிய மருத்துவமனை கட்டிடமாக பயன்பாட்டில் உள்ளது.

மேற்கண்ட இரண்டு மருத்துவமனைகள் மீது அனுமதிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாறுதலாகவும்/கூடுதலாகவும் கட்டிடம் கட்டியிருப்பதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135(1)–ன் கீழ் 23.07.2025–ல் அறிவிப்பும் இறுதி அறிவிப்பு 04.02.2026 அன்று வழங்கப்பட்டது. மேற்கண்ட அறிவிப்புகளின்படி மருத்துவமனை சார்பாக நடவடிக்கை எடுக்காததால் 25.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 180, 182 (1, 2) –ன் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும், இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மேற்கண்ட அறிவிப்புகளின் தொடர்பாக வெங்கடேசன் மருத்துவமனை சார்பாக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மருத்துவமனை சார்பாக தெரிவிக்கப்படுள்ளது.''.

8. இரண்டாம் எதிர்மனுதாரர் டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனையின் உரிமையாளர் திரு. வெ. விஷ்ணுவரதன் வெங்கடேசன் என்பவர் 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''காஞ்சிபுரம் மாநகராட்சி வைகுண்ட பெருமாள் சன்னதி தெரு, கதவு எண்.1ஏ–ல் அமைந்துள்ள வெங்கடேசன் மருத்துவமனை 2017 முதல் இயங்கி வருகிறது. மேலும் காஞ்சிபுரம் மாநகராட்சி கிழக்கு ராஜவீதி தெரு, கதவு எண்.88–ல் அமைந்துள்ள வெங்கடேசன் மருத்துவமனை 1997 முதல் இயங்கி வருகிறது. காஞ்சிபுரம் மாநகராட்சியில் முதலில் வணிக நோக்கத்திற்கான அனுமதி வழங்காமல் குடியிருப்பு கட்டிடங்கள் மட்டும் அனுமதி வழங்கியதால் மேற்கண்ட இரு மருத்துவமனை கட்டிடங்களுக்கு குடியிருப்பு கட்டிடமாக கட்ட அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட இரண்டு மருத்துவமனை கட்டிடங்களுக்கும் The Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 1958இன்படி காஞ்சிபுரம் ஸ்ரீமுத்தீஸ்வரர் திருக்கோவில் நிர்வாகத்திடம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட இரு மருத்துவமனை கட்டிடங்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி துறையிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீமுத்தீஸ்வரர் திருக்கோவில் நிர்வாகத்திடம் அனுமதி வேண்டி அளித்த மனுவின் நகல் சீராய்வு மனுவின் நகல் மற்றும் அதன் ஒப்புகை நகல் ஆகியவற்றை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.''.

9. மனுதாரரின் முறையீட்டு மனு, எழுத்துபூர்வமான வாக்குமூலம், நேரடியாக அளித்த வாக்குமூலம், முதல் எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள், உதவிப் பொறியாளர்களின் (திட்டம்) வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனையின் உரிமையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

காஞ்சிபுரத்தில் 1-A வைண்டபெருமாள் கோவிலுக்கு 250 மீட்டர் தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலுக்கு 100 மீட்டர் தூரத்திலும் உலகளந்த பெருமாள் கோவிலுக்கு 200 மீட்டர் தூரத்திலும், காமாட்சி அம்மன் கோவிலுக்கு 1/2 கிலோ மீட்டர் தூரத்திலும் சுமார் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டிடம், டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை பிரதான சாலையில் பார்க்கிங் வசதியில்லாமல் கட்டப்பட்டுள்ளது என்பதும், அதனை அகற்ற காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு புகார் மனு அளித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், தமிழகத்தில் பழமையான கோவில்கள் கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என தமிழ்நாடு அரசு 30.01.1997 நாளிட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், அரசாணை எண்.139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.05.2002 ல் காஞ்சிபுரம் முழுமைத்திட்டத்தின்படி The Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 1958இல் அறிவிப்பில் தெரிவித்துள்ளபடி, முக்தேஸ்வரர் கோவில், வைகுண்ட பெருமாள் கோவில் மற்றும் காமாட்சி அம்மன் கோவில், 1 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் கட்டிடம் 9 மீட்டர் உயரம் இருக்க வேண்டும் என்பதும், எனவே, டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை விதி மீறி கட்டிடம் கட்டப்பட்டதற்கு உடந்தையாக இருந்த காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்கவும், சென்னை உயர்நீதி மன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி மேற்கண்ட மருத்துமனை மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மூலம், எழுத்துபூர்வ வாக்குமூலம் மற்றும் நேரடியான வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.11, நகரளவு எண்.823/1ஏ, பழைய கதவு எண்.1ஏ வைகுண்ட பெருமாள் சன்னதி தெருவில் அமைந்துள்ள டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை மற்றும் காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.11, நகரளவு எண்.825, 826/2, கதவு எண் 88, 87C, கீழராஜ வீதி தெருவில் அமைந்துள்ள டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை ஆகிய இரு கட்டிடங்களில் செயல்பட்டு வருகிறது என்பதும், முதல் கட்டிடம் கட்டிட அனுமதியின்படி குடியிருப்பு கட்டிடம் கட்ட ஸ்டில்ட் தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், அனுமதிக்கு மாறாக முன்பக்கம் மற்றும் பக்கவாட்டில் காலியிடம் பராமரிக்காமல் 21.60மீ X 8.00 மீ நீள அகலத்தில் கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டு முழு கட்டிடமும் மருத்துவமனையாக பயன்பாட்டில் உள்ளது என்பதும், இரண்டாவது கட்டிடம், அனுமதியின் படி குடியிருப்பு கட்டிடம் கட்ட தரைத் தளம், முதல் தளம், இரண்டாம் தளம் கட்ட அனுமதி பெற்று, முன்பக்கம் மற்றும் பக்கவாட்டில் காலியிடம் விடாமல் 4 மாடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட இரண்டு மருத்துவமனைகள் மீது அனுமதிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாறுதலாகவும்/கூடுதலாகவும் கட்டிடம் கட்டியிருப்பதால், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135(1)–ன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்புகளின்படி மருத்துவமனை சார்பாக நடவடிக்கை எடுக்காததால் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 180, 182 (1, 2)–ன் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், மேற்கண்ட அறிவிப்புகளின் தொடர்பாக வெங்கடேசன் மருத்துவமனை சார்பாக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும் முதல் எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் (திட்டம்)–ன் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

காஞ்சிபுரம் மாநகராட்சி வைகுண்ட பெருமாள் சன்னதி தெரு, கதவு எண்.1ஏ–ல் அமைந்துள்ள டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை 2017 முதல் மற்றும் கிழக்கு ராஜவீதி தெரு, கதவு எண்.88–ல் அமைந்துள்ள வெங்கடேசன் மருத்துவமனை 1997 முதல் இயங்கி வருகின்றன என்பதும், காஞ்சிபுரம் மாநகராட்சியில் முதலில் வணிக நோக்கத்திற்கான அனுமதி வழங்காமல் குடியிருப்பு கட்டிடங்கள் மட்டும் அனுமதி வழங்கியதால் மேற்கண்ட இரு மருத்துவமனை கட்டிடங்களுக்கு குடியிருப்பு கட்டிடமாக கட்ட அனுமதி பெறப்பட்டது என்பதும், இவ்விரண்டு மருத்துவமனை கட்டிடங்களுக்கு The Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 1958இன்படி காஞ்சிபுரம் ஸ்ரீமுத்தீஸ்வரர் திருக்கோவில் நிர்வாகத்திடம் அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட மருத்துவமனை கட்டிடங்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி துறையிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரர் டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை உரிமையாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.11, நகரளவு எண்.823/1ஏ, பழைய கதவு எண்.1ஏ வைகுண்ட பெருமாள் சன்னதி தெரு மற்றும் கிழக்கு ராஜவீதி தெரு, கதவு எண்.88 ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள டாக்டர் வெங்கடேசன் மருத்துமனையின் இரண்டு கட்டிடங்களுக்கு குடியிருப்பு கட்டிடங்களாக கட்டிட அனுமதி பெறப்பட்டதற்கு மாறாக வணிக பயன்பாட்டு கட்டிடமாக இயங்குவதால், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135 (1)–ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டும் அதன்படி மேற்கண்ட மருத்துவமனை உரிய நடவடிக்கை எடுக்காததால், அம்மருத்துவமனை மீது காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ல் பிரிவு 135(1) (2) (6) r/w 180–ன்கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர்களின் (திட்டம்) வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதையும், வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

இந்நேர்வில், மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர் நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது

இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026—ஆம் ஆண்டு மே திங்கள் 07—ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S. அன்பழகன்,
155, அசோக் நகர்,
முசிறி மெயின் ரோடு,
துறையூர் (அஞ்சல் (ம) வட்டம்),
திருச்சிராப்பள்ளி மாவட்டம்—621 010.

(2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம்.

(3) திரு. வெ. விஷ்ணுவரதன் வெங்கடேசன்,
உரிமையாளர்,
டாக்டர் வெங்கடேசன் மருத்துவமனை,
கதவு எண் 1ஏ,
வைகுண்ட பெருமாள் கோவில் தெரு,
காஞ்சிபுரம்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.